உ
சிவமயம்

கிராஞ்சியம்பதிக் கீதாஞ்சலி

# செந்தமிழ்மாலை



வித்துவான்

பொன். அ. கனகசபை,

புங்குடுதீவு.

ஆசிரியர் : வித்துவான், பொன். அ. கனகசபை

பதிப்புரிமை : கனகசபை அறக்கட்டளை, புங்குடுதீவு.

தலையங்கம் : செந்தமிழ்மாலை

பதிப்பு : முதற்பதிப்பு ஐப்பசி 1986

அச்சுப்பதிப்பு: ஆர் எஸ் அச்சகம், யாழ்ப்பாணம்

பக்கம் : 20

தூயி தசாம்ச பகுப்பெண் : 200 — 294·5

# பதிப்புரை

செந்தமிழ்மாலை தமிழ் படித்துத் தமிழ்வாழ்வு வாழ்ந்துவரும் தமிழ்க் கிளாரின் தமிழ்த்தொண்டாகும். இவர் சிற்றம்பலஅடிகளின் திருச்செந்தூர் அகவல் முதல் திருக்கோவையார் வள்ளி திருமணம் ஆகிய தெய்வீக நூல்களை ஆராய்ந்து தத்துவ வடிவங்களாகவுள்ள எமது சமய உண்மைகள், எங்கள் வாழ்கையோடு பொருந்திய தெய்வீக நெறிகளென்பதை நாம் உணர்ந்துகொள்ள வழிகாட்டிய பேரறிஞராவர்.

மீண்டும் வள்ளி திருமணத்தின் தத்துவ விளக்கத்தை பெருங்காடு கிராஞ்சியம்பதியானுக்குத் தமிழ் மாலையாக்கி அதைப் பாடிமகிழப் பொழிப்புரை விளக்கத்தையும் தந்துள்ளார்.

வள்ளி திருமணம் தேவருலகத்தில் நடைபெற்ற ஓர் திருமண விழாவெனக் கருதிக்கொண்டாடிவரும் எமக்கு அது ஆன்மகோடிகளை ஈடேற்றும் ஆத்மீக விழாவென்பதை செந்தமிழ்மாலைமூலம் விளக்கி எமது அறியாமைவிலக வழிகாட்டியுள்ளார் கிராஞ்சிக்கிளார் **பொன். அ. கனகசபை.** இதைப் படித்தும் படிக்கக் கேட்டும் பயன் பெறுவோமாக.

வாழ்க அவரின் தமிழ்த் தொண்டு !
வளர்க அவரின் அறிவுப்பணி ! !

வெளியீடு :

கனகசபை அறக்கட்டளை,
புங்குடுதீவு.

விலை :

ரூபா 5 - 00

உ
சிவமயம்

# முன்னுரை

கண்கண்ட தெய்வம், கலியுகவரதன் என்றெல்லாம் போற்றப்படுபவர் கந்தசுவாமியார். கிராஞ்சியம்பதிக் கந்தசுவாமியார் தந்த பெருவாழ்வுதான் நம்முடைய வாழ்வு; தான் தந்த தனு, கரணாதிகளைக் கொண்டு தன்னோடு அன்புசெய்து, தனது கந்த பதத்தை அடையவேண்டுமென்பதே அவருடைய திருப்பாதமாகிய திருவருட்குறிப்பு. கந்தப்பெருமானின் திருப்பாதக்குறிப்பை உணராது, முன்னைவினைப் பெருங்காட்டில் மனமாதி புலவேடர் வசப்பட்டு அல்லற்பட்டு அலமருகின்றோம்.

"அரன்தன்பாதம் மறந்துசெய் அறங்கள் எல்லாம் வீண் செயல்" என்பது சிவஞானசித்தியார்; அரனடிமறந்து தக்கன் செய்த மாவேள்வி சங்காரமாயிற்று; அதற்கு உடந்தையான தேவர்கள், உடனடியாக வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டனர்; போதாக்குறைக்கு 108 யுகம் சூரனால் வதைக்கப்பட்டனர்; கடைசியாகக் கந்தசுவாமியாரே சூரனைச் சம்மாரஞ் செய்து தேவரைக் காப்பாற்றியருளினார். யாக சங்காரமும், சூரசம்மாரமும் எக்காலமும் நடந்த வண்ணமாகவே இருப்பதைச் சிந்திப்பவர் அறிவர்.

கந்தசுவாமியாரின் திருவடியில் அயரா அன்புசெய்து அருள் நெறி ஒழுக்கம் பூண்டு, அவரோடு இருமையில் ஒருமையாய் இரண்டறக்கலந்து சுத்தமாய் வாழ்வதே உண்மை வாழ்வு, "ஊடுவதுன்னோடு உவப்பது முன்னை" என்ற மணிவாசகர் அடியொற்றி நாமும் கந்தசுவாமியாரோடு கூடியும், பிரிந்தும், இருந்தும், ஊடியும், இரங்கியும் அன்பினால் ஐந்து வித ஒழுகலாற்றைக் கடைப்பிடித்து வாழ்வோம். அன்பின் ஐந்திணைச் சம்பந்தமே சைவசித்தாந்தங் கூறுஞ் சுத்தாத்துவித சம்பந்தமாகும்.

இந்த அன்பின் ஐந்திணைச் சம்பந்தஞ் செய்தலைச் 'தமிழ் செய்தல்' என்பர் திருமூலர். "என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ்செய்யுமாறே" என்பது திருமூலர் திருமந்திரம்; இதனை விளக்குவார்போல 'சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்' எனவும் திருமந்திரத்தில் பாடியுள்ளார். தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்றுவகைப்படுமாறே இறைவனும் சத்து, சித்து, ஆனந்தம் என மூன்று இயல்பினை உடையர். கந்த

சுவாமியாரின் பொது, சிறப்பு (இயலை) இலக்கணங்களை உணர்ந்து, அவனருளால் அவரோடிசைந்து, அவரது ஆனந்த நடன அநுபூதியை அடைவதே எமது பிறவிப்பேறாகும்.

பக்குவான்மாவான வள்ளியம்மையாரோடு பதியாகிய கந்த சுவாமியார் மார்ச்சால சம்பந்தமுறச் சற்குருவாக வந்து ஆடியருளிய ஞான நாடகத்தினை 2067 செய்யுள் கொண்ட தட்ச காண்டத்தில் 267 செய்யுளால் கச்சியப்ப மாமுனிவர் வள்ளியம்மை திருமணப் படலமாகப் பாடியுள்ளார். அதனைச் சுருக்கி அடியேன் 27 செய்யுளால் நட்சத்திர மாலையாகப் பாடித் துதித்துள்ளேன்.

"எப்பொரு ளேனும் இருபத் தெழுவகை
செப்பிய நெறியது செந்தமிழ் மாலை"

என்பது பன்னிருபாட்டியல். பிரபந்த வகையில் 'செந்தமிழ் மாலை' என்னும்பெயரில் இதனை ஆக்கத் திருவருள் பாலித்துள்ளது. கந்தனடியார்கள் கந்தசட்டி விரத காலத்தில் பொருளுணர்ந்து பாடிப் பயனடையுமாறு மெய்ப்பொருள் உரையுடன் இந்நூல் வெளிவருகின்றது. கிராஞ்சியம்பதி கந்தசுவாமியாரின் கீர்த்திப் பிரதாபம் ஒன்றுமே கலியுகவேதனைகளுக்குக் கைகண்ட மருந்து.

"பஞ்சம்படை வந்தாலும் பாரெல்லாம் வெந்நாலும்
அஞ்சுவமோ நாங்களடி — கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி"

— சிவயோகசுவாமிகள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ் மாலை

## கிராஞ்சியம்பதிக் கீதாஞ்சலி

### வள்ளிதிருமணம்

காப்பு

**திருத்தமிழ் உண்மை தெரியக் கிராஞ்சித்**
**திருப்பதி அஞ்சலி செப்ப — உரிப்பொருள்**
**காக்குஞ் சரவணன் கன்னியை வேட்டிடக்**
**காக்குஞ் சரவணன் காப்பு.**

பொழிப்புரை:

*தெய்வீக அன்பினைந்திணைக் களவியலின் உண்மையை அறியும் பொருட்டுக் கிராஞ்சியம்பதிக் கீதாஞ்சலி என்னுஞ் செந்தமிழ் மாலையைப்பாட, அகப்பொருளுக்குரிய களவு கற்பு ஒழுக்க நெறிகளை (உலகத்தாருக்கு ஞான நாடகமாத்திரையாய் வாழ்ந்து காட்டிக்) காத்தருளும் கந்தசுவாமியார் வள்ளியம்மையாரை (ஞானதீட்சைக் கிரமத்தால்) கலந்திட (ஞானவேழமாக வந்து) பாதுகாத்தருளிய ஆனைமுகப்பெருமான் இடையூறின்றிக் காத்தருள் புரிவாராக என்றவாறு.*

நூல்

### வள்ளியம்மை திரு அவதாரம்

பண்: *சீகாமரம்*      'கீதத்தை மிகப்பாடும்' என்றபடி.

**1. சிவமுனிவர் தரிசனத்தால் சினையான மான்வயிற்றில்**
**ஆவமிருந்து வள்ளிமூலந் தனையகழ்ந்த குழியினிலே**
**கவினொளிரப் பிறந்தவள்ளி கணவனாய் எமையாளச்**
**சிவகுருவாய்க் கிராஞ்சியமர் சேந்தன்தாள் அஞ்சலிப்பாம்.**

பொழிப்புரை:

*(சிவன் கொண்டருளும் நவந்தரு பேதங்களுள் ஒன்றான விஷ்ணுமூர்த்தி, கண்ணுவ முனிவர் சாபத்தால்) சிவமுனிவர் (ஆகி வள்ளிமலைச் சாரலில் தவஞ்செய்தபோது, அங்குவந்த இலக்குமியாகிய) மானைக்கண்டு காதலித்துச் செய்த காட்சிப்புணர்ச்சி*

யால் அம்மான் வயிற்றில் கருவுண்டாக (விஷ்ணு புதல்வியாய்த் தோன்றிக் கந்தசுவாமியாரை அடையவிரும்பித்) தவஞ்செய்து (பெருமானது அருளாணைப்படி) அக்கருவினுட் புகுந்திருந்து, வள்ளிக்கிழங்கு அகழ்ந்து எடுக்கப்பெற்ற குழியிலே இயல்பாகவே அழகுவிளங்கப் பிறந்த, பக்குவான்மாவான வள்ளிநாயகியாரின் மணவாளனுய், (பக்குவமில்லாத கடைப்பட்ட) எம்போல்வாரையும் ஆட்கொண்டருளத் (தென்முகம் நோக்கிய வண்ணம்) சிவ பெருமானுக்கு ஓமெனுந் தாரகப் பிரணவத்தை உபதேசிக்கும் ஸ்கந்த குருநாதனுய்க் கிராஞ்சியம் பதியில் விரும்பி வீற்றிருக்கும் கந்தசுவாமியாரின் (உயிரில் யான் எனது என்னுஞ்செருக்கு அற முன்னிற்கும்) திருவருளாகிய திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

"பரை உயிரில் யான் எனது ஒன்றற நின்றது அடியாம்" என்பது உண்மைநெறி விளக்கம்.

## தினைப்புனங் காக்க வைத்தல்

2. இந்துவென வளர்வள்ளி இளநலஞ்சேர் பருவமுற
முந்திவரு குலமுறையில் முதிர்தினைப் புனங்காக்க
வந்துகன்னி தேன்மொழிக்கு வாயூறிக் கிராஞ்சியமர்
கந்தசாமி திருப்பாதங் கசிந்துருகி அஞ்சலிப்பாம்.

### பொழிப்புரை:

வளர்பிறை போல (நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக) வள்ளியம்மையார் வளர்ந்து இளமை அழகு ஒளிரும் கன்னிப்பருவமுற்று, தொன்றுதொட்டுவந்த வேட்டுவகுலா சாரப்படி கதிர் முதிருகின்ற தினைப்புனத்தைக் காவல்செய்து கொண்டிருக்க (மானிட வேடராகி மார்ச்சால சம்பந்தமாய் ஆட் கொண்டருள) த்தேடி வந்து ஞானோபதேசஞ் செய்து, பக்குவான் மாவாகிய அம்மையாரின் தேன்போலத் தித்திக்கும் திருவாய் மொழிக்கு மிக்கவிருப்பமுற்று நின்று, கிராஞ்சியம்பதியில் வெளிப் பட வீற்றிருந்தருளும் கந்தசுவாமியாரின் திருவருள் மயமாகிய திருவடிகளை உள்ளங்கசிந்துருகக் கைகுவித்து வணங்குவோம் எ-று.

## தினைப்புனங் காத்தல்

3. புலப்பறவை மனவிலங்கு புகுந்தழிவு செய்யாமல்
பலப்பலநா மஞ்சொல்லிப் பஞ்சாக்கரக் கவண்வீசித்
தலத்துவள்ளி தினைகாக்கச் சற்குருவாங் கிராஞ்சியான்
மலத்துயர நீக்கியருள் மலர்ப்பதங்கள் அஞ்சலிப்பாம்.

## பொழிப்புரை :

பஞ்சப் பொறிகளாகிய குருவிகளும், மனமாதிகரண விலங்குகளும் பிரபஞ்சமாகிய புனத்திற் புகுந்து (ஞானப் போகமாகிய) தினைவிளைவை அழித்துவிடாதபடி பரம்பொருளின் ஆயிரந் திருநாமங்களைச் சொல்லிப் பல வகைப்பட்ட திருவைந்தெழுத்தாகிய இரத்தினக் கற்களைக் கவணில் வைத்து வீசியெறிந்தும் (தத்துவாதீதமாகிய) பரணிடத்தில் (எத்திசை நிகழ்வையும் இருந்தவாறே காணத்தக்க) யோகாசனத்திலிருந்து பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார் புலங்காத்தலாகிய தியானஞ் செய்ய, பரமாசாரியராய் விளங்கித் தோன்றியருளும் கிராஞ்சியம்பதிக் கந்தசுவாமியாரின் மலம் நீக்கி இன்பருள எங்கும் வியாபித்துள்ள, கிரியா சக்தி ஞானசக்தியாகிய இரண்டு திருப்பாதங்களையுங் கைகுவித்து வணங்குவாம் எ - று.

பஞ்சப் பொறிக்குருவியைப் பஞ்சக்குருவி என்பர்.

## முருகன் தினைப்புனஞ் சேர்தல்

4. புலவேடர் உலகத்தினைப் புனத்துவள்ளி காத்திருக்க
நிலையான தணிகையவள் நினைவாக வந்திருந்து
செலுமாறு நாரதனுஞ் செலுத்தியிடத் தேடிஇச்சைக்
குலமாதைப் புணர்கிராஞ்சிக் குரவன்தாள் அஞ்சலிப்பாம்.

## பொழிப்புரை:

ஐம்புல வேடரின் உலகமாகிய தினைப்புனத்தில் பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார் பதியாகிய சற்குருவின் வரவு பார்த்திருக்க (கந்தகிரியில் கிரியாசக்தியாகிய தெய்வநாயகியை விட்டு) துரியத் தியான நிலையமாகிய திருத்தணிகைமலையில் வள்ளியின் தியானமாயே எழுந்தருளியிருந்து, 'ஆட்கொண்டருளச் சென்றருளுமாறு ஆத்மபோதமாகிய நாரதமுனிவரும் பிரார்த்திக்க (கருணைகூர்ந்து மார்ச்சால சம்பந்தமாக)த் தேடிவந்து, தன் இச்சையான வள்ளிநாயகியாகிய சிறந்த பக்குவான்மாவை இடையறா இன்பமுறக்கலந்து, கிராஞ்சியம்பதியிலமர்ந்த சற்குரு நாதனாகிய கந்தசுவாமியாரின் திருவருள் மயமான திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று

## ஞான ஏதுவான உலகியல்பு மொழிதல்

5. வள்ளியவள் நினைக்குமுன்னம் வனவேட ராய்வந்து
தெள்ளமுத மொழிபெறவே திறந்திறமாய் வினவிமதி
வெள்ளமதில் அலைவதுபோல் விளையாடிக் கிராஞ்சியமர்
வள்ளலடி மணங்கலந்து வாழ்த்திநிதம் அஞ்சலிப்பாம்.

**பொழிப்புரை:**

பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார் பதியைத் தியானித்த மாத்திரத்தே (மானுடச்சட்டை சாத்தி) வேட்டுவக் கோலத்தில் விளங்கித் தோன்றித், தெளிந்த தேவாமிர்தம் போன்ற இனிய வாய்ச்சொல்லைக் கேட்டு மகிழ்வதற்காகப் பேர், ஊர், வழி எனப் பல வினுக்களை வினவி (ஆகாயத்தில் அசையாது தானே நிற்குஞ் சந்திரன்) தண்ணீரில் அசைந்து தோன்றுவதுபோலத் தான் விகாரமின்றி நின்று, ஆன்மாக்களின் இச்சையைப் பெருக்குவதற்சாகப்) பல திருவிளையாடல்களைச் செய்தருளிக், கிராஞ்சியம்பதியில் அமர்ந்தருளும் கருணை வள்ளலாகிய கந்தசுவாமியாரின் திருவருளாகிய திருவடிகளை மனமலர்மீது இருத்திக் கசிந்துருகித் துதித்துக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

### வேடர்வர வேங்கை மரமாதல்

6, மனநம்பி துணையிலுற வனசரர்கள் பகையிலுறத்
திணையளவும் அறியனெனத் தெரிந்துவள்ளி களவிலுறத்
தனதுநவம் வேங்கைமரத் தன்மையுறுங் கிராஞ்சியான்
அனவரத இன்பமுற அடியிணைகள் அஞ்சலிப்பாம்.

**பொழிப்புரை:**

மனமாகிய நம்பியரசன், இனிய துணையானது என்று கொள்ளவும், ஐம்புல வேட்டுவர்கள் இத்துணை புகுந்தவாற்றால் இனித்தீங்கு நேரும் என்று பகைகொள்ளவும், அம்மரம் வந்த விதத்தை அறிந்து வைத்தும் வள்ளியம்மையார், தம்மனங்கவர்ந்தார்க்கு யாது விளையுமோ என்று எண்ணி "ஈது வந்தவாறு உணர்கிலேன்" என்று அன்பினேந்திணைக் களவுரை பகரவும் தனது வடிவை ஞானசாத்திரவேங்கைமரத் தன்மையாகக் கொள்ளும் கிராஞ்சியம் பதிக் கந்தசுவாமியாரின் பேரின்பத்தை என்றும் பெறுமாறு அவருடைய திருவருளாகிய இரண்டு திருவடிகளையும் கைகுவித்து வணங்குவாம் எ - று.

வேங்கை மரமாகிய நிகழ்ச்சி, உயிரைப் பொறி புலன்கள் கலக்க முற்படும் பொழுது, தனது வேதாகம சாத்திர ஞானத்தால் ஏகாக்கிர சித்தமாய் மரம்போல உறுதியாய் நிற்பதை உணர்த்துவதேயாம்.

### ஞானோபதேசம்

7. பொன்றுமுடல் பொருளாவி புலனுகர்வு மாகிவள்ளி
என்றுமுனை நீங்காதே இருப்பேனைக் கலந்திடுவாய்
மன்னுதமிழ் இன்பமென்று வண்கிராஞ்சிப் பதிமேவிக்
குன்றுதோ ருடியருள் குமரனடி அஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

' உடலாயும், உடைமையாயும், உயிர்க்குயிராயும், நீராடுஞ் சுனையாயும், அணியுஞ் சாந்தாயும், சூடும் பூக்களாயும் பக்குவான்மாவே அநாதியே உன்னைவிட்டு நீங்காதிருக்கின்றேன்; பக்தி செய்து என் இச்சா சக்தியாக இரண்டற என்னடி சேர்வாய்; அன்பினைந்திணைக் களவியல் இன்பநிலை பெருகும் ' என்று ஞானோபதேசஞ் செய்து கிராஞ்சியம்பதியில் எழுந்தருளியுள்ள குன்றுதோறும் திருவிளையாடல் புரியும் குமாரசுவாமியின் திருவருளாகிய திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

## விருத்த வேதியராதல்

8. அழகுவள்ளி சன்மார்க்கம் அறைபோதில் வேடர்வரக்
கிழவிருத்த வேதியராய்க் கிளைவாழ நீறருளிப்
பழநிமலைச் சுனையாடிப் பால்பழமுண் டமர்கிராஞ்சிக்
குழகனடி மனங்கலந்து குரலிசைகொண் டஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

நற்பணி செய்யும் பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார் ( தருமமுந் தகுதியுமான ) நன்னெறியினைப் பெருமானுக்கு எடுத்துரைக்குஞ் சமயத்தில் மனநம்பியரசனும் புலவேட்டுவரும் வரக் கண்டதும் ( ஓடி ஒதுங்குமென்று அவள்கூற மகிழ்ந்து ) அறமுதிர்ந்த சந்நியாசியாகித் தன்னை நோக்கி வந்த வேட்டுவர் அருள்நெறியில் திளைத்து வாழுமாறு ஆசியுடன் திருநீறளித்துத் தம் எண்ணத்தையும் வெளிப்படுத்தி, அவர்கள் வள்ளிக்குத் துணையிருத்திச் செல்ல, சுழுமுனைவழியேகி உச்சித்துளையில் தம் இச்சா சக்தியான நிமலாவதிக் குமரிச்சுனையாடி ( அப்பக்குவான்மாவுக்காகப் பரமான்மாவாகிய தானே ) சந்திர மண்டலத்தூறும் ஞானப் பாலருந்திப் பரஞானவெளியில் முத்திக்கனியமுதுண்டு ( அடியார்கள் அருள்நெறி வாழ்வு பெறுமாறு கிராஞ்சியம்பதியில் விரும்பி வீற்றிருக்கும் கந்தசுவாமியாரின் திருவருளாகிய திருவடியில் கலந்து நின்று கண்ட வாத்திய இசையால் மனமிசையப் பாடிக் கை குவித்து வணங்குவாம் எ - று. பழ, நிமலை என்க. பழநிமலை சிலேடை.

## பசி தாகம் தணித்தல்

9. அரும்பசியைப் போக்கிடவே அன்னைகையில் அமுதமுண்டு
நிரம்பவிடாய் தீர்த்தருள நிராதாரச் சுனையருந்திப்
பரங்குருவாய்க் கிராஞ்சியம் பதியமருங் கந்தசாமி
பெருங்கருணை மலரடிகள் பிரிவறநின் றஞ்சலிப்பாம்.

## பொழிப்புரை :

(ஆத்ம போதத்தைக் கொள்ளும் பொருட்டுக் கொண்ட) அரிய பசியைத் தணிக்கப் பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார் (மும்மலமாகிய தேன், கனி, தினைமா என்பவற்றை ஆத்ம நிவேதனமாகக்) கையாற் கொடுக்க வாங்கி அவற்றை உண்டருளித், தாங்குதற்கரிய தாகத்தைத் தணிக்குமாறு ஆதார மலைகள் ஆறுங்கடந்து ஏழாவதான நிராதார மலையுச்சியிலுள்ள சுனை நீராகிய அமுதமருந்தி (இரண்டறக் கலக்க வேண்டி) க்குருபரனுகிக் கிரௌஞ்சியம்பதியில் விரும்பி வீற்றிருக்கும் கந்தசுவாமியாரின் எங்கும் வியாபித்துள்ள திருவருளாகிய திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

### விநாயகர் வருகை

10. அழகியசிற் றம்பலத்தே அதிசூக்கும விந்துநாதச்
சுழிகளிறு முன்னுகத் தொழுதுவள்ளி பின்னுகக்
கிழவனுய் நடுமுயங்குங் கிரௌஞ்சியம் பதிமுருகன்
உழிதருதாள் இருமையினில் ஒருமையுற அஞ்சலிப்பாம்.

## பொழிப்புரை :

சிவஞான அழகினையுடைய ஞானவெளியில் பரவிந்து பரநாதம் எனப்படும் (சுழியும் சிறுஞ் சேர்ந்த) அதிசூக்கும சொரூப சமட்டிப் பிரணவ மந்திரமாகிய ஞானவேழம் முன்னுகவும், பக்குவான்மாவாகிய வள்ளியம்மை (அஞ்ஞான வாசனை நீங்கி உபதேசித்தபடி செய்வேனென்று) வணங்கிப் பின்னுகவும், தான் விருத்த வேதியராகிய சற்குருவாகி நடுவேநின்று தீட்சையால் கலப்பினைச் செய்து, கிரௌஞ்சியம்பதியில் வீற்றிருக்கும் கந்தசுவாமியாரின் ஐந்தொழில் செய்து சுழன்று திரியும் திருவருளாகிய திருவடியை நாமும் இரண்டறக் கலந்து ஒன்றுகும் பேற்றைப் பெறக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

முத்தி பஞ்சாக்கர உபதேசத்தில் நகர மகரங்களை (ந. ம. வை) நீக்கி, முன்னுள்ள சிகரமாகிய பதியை யகரமாகிய ஆன்மா சேரும்படி வகரமாகிய திருவருள் (சற்குரு) நடுநின்று கூட்டிய வாறு அறிக. தீட்சையால் ஓங்காரமும், கந்தசுவாமியாரும், வள்ளியம்மையாரும் ஒன்றுய் ஒருமையுற்றவாறும்.

## விசுவரூப தரிசனம்

11. பரவெளிசேர் பூங்காவில் பரங்குருவாய் நிருவாணக்
கிரியைவழிச் சிவமாக்கிக் கிருபையுடன் தனதுதிருப்
பெருவடிவு காட்டியிச்சைப் பெருந்தேவி ஆக்கியருள்
திருமுருகன் கிராஞ்சியமர் திருப்பதியை அஞ்சலிப்பாம்.

### பொழிப்புரை :

*ஞானகாசத்தில் ஞானப் பூஞ்சோலையிடத்துப் பரம சற்குருவாகி நிருவாண தீட்சையைச் சிவாகமக் கிரியை விதிப்படி செய்து, பக்குவான்மாவாகிய வள்ளியம்மையாரை இரண்டறக் கலத்தலாகிய சிவமாந்தன்மையுடையவராக்கிச் சிவஞானத்தையும் உதிக்கும்படி செய்து கொண்டு, தன்னுடைய சகளத் திருமேனியைத் தரிசிக்குமாறு விசுவரூபத்தைக் காட்டியருளித், தன் இச்சாசத்தியாகிய தேவியாகக் கொண்டருளிய கந்தசுவாமியார் விரும்பி வீற்றிருக்கும் கிராஞ்சித் திருத்தலத்தையும் அப்பெருமானின் திருவுருவாக மனத்திலே தியானித்துக் கைகுவித்து வணங்குவாம் எ - று.*

*பரமசற்குரு பக்குவான்மாவுக்குப் பிரணவம், முத்தி பஞ்சாக்கரங்களை உபதேசித்ததும், தற்போதங்கழன்று சிவமாந்தன்மையுற்று, ஞானத்தைப் பெற்று சொரூப விளக்கமுற்றவாறு காண்க. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் இறைவன் வடிவங்களாகும்.*
*பூங்கா : துரியாதீக சிவபோகத் தானம்.*

## பாங்கிமதி உடம்பாடு

12. ஆங்கான்ம நாயகியின் அருட்பாங்கி நாற்றமுதல்
நீங்கியவை வினவிநிற்க நீள்கிராஞ்சிப் பதிவந்தே
பூங்குவளைக் கண்காட்டப் புத்துறவை உணர்ந்திடுநற்
பாங்கிமதி உடம்பாடு பாடிநிதம் அஞ்சலிப்பாம்.

### பொழிப்புரை :

*திருவருளாகிய தோழி, தினைப்புனத்தில் பக்குவான்மாவாகிய தலைவியினிடத்தே ( முன்னர் உற்றதாகிய ) நாற்றம் முதலியவற்றின் வேறுபாட்டிற்குக் காரணமான நிகழ்ச்சியை (ப் பற்றி அறிவதற்காக உரிமைபற்றி ) வினவி உரையாடுஞ் சமயத்தில், மிகுந்த புகழையுடைய கிராஞ்சியம்பதித் தலைவராகிய கந்தசுவாமியார் வில்வேட்டுவராய் வந்து நின்று, பொலிவினையுடைய குவளை மலர் போன்ற தன் கண்பார்வை மூலம் காட்ட அன்பினைந்திணைக் களவியற் புதிய உறவை உள்ளபடி நேரிற்கண்டுணர்ந்து, நல்ல பாங்கி மதியுடன் பாடுற்ற திருவிளையாடலைத் தினமும் புகழ்ந்து பாடிக் கைகுவித்து வணங்குவாம் எ - று.*

## பாங்கியிற் கூட்டம்

13\. ஆதார மடல்விலக்கி அருட்பாங்கி கூட்டிவைக்க
ஆதார மானழுவத் தானவள்ளி தனைமணந்து
ஆதார மாய்க்கிராஞ்சி அமர்ந்தருளுந் திருமுருகன்
ஆதார பாதமலர் ஆட்படநின் றஞ்சலிப்பாம்.

### பொழிப்புரை :

ஆதார யோகமாகிய மடலேறுதலை விலக்கிப், பரிபக்குவ நிலையிற் பதியுந் திருவருட் சத்தியாகிய தோழி, ( கருவி கரணங்கள் தொழிற்படுஞ் சுத்த சாக்கிரமாகிய ) பகற்குறியில் ஆட்கொண்டருளுமாறு கூட்டிவைக்க, மானின் கருக்குழியை ஆதாரமாகக் கொண்டுபிறந்த பக்குவான்மாவாகிய வள்ளியம்மையாரோடு பிரிப்பின்றி இரண்டறக் கலந்து, அனைத்து உயிர்களையுந் தனித்துணையாய்க் காத்தருளக் கிராஞ்சியம்பதியில் அமர்ந்திருக்கும் கந்தசுவாமியாரின் அருள்மயமான திருவடி மலர்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு அடிமைத்திறம் பூண்டு நின்று கைகுவித்து வணங்குவாம் எ - று.

சிவஞானத்தால் எய்தற்பாலதாய இன்பத்தினை, எத்துணையுங் கீழ்ப்பட்ட கிரியா யோகமாகிய ஆதார யோகமடலேறியேனும் பெறுவேன் என்று கூற, அது தகுதியற்ற செயல் எனத்தோழி விலக்கினுள் என்க. அழுவம் - குழி; மானமுவம் பிரகேழிகையணி.

## வறும்புனங்கண்டு வருந்தல்

14\. அன்பான வள்ளிசெல்ல அரும்புனமுங் கொய்தொழியப்
பின்பாகத் துலகுப்யப் பெருங்காட்டைக் கேட்டுவந்து
நென்பாகக் கிராஞ்சியந் திருப்பதியில் அமர்கந்தன்
தன்பாத மலர்நாளும் சலம்பூக்கொண் டஞ்சலிப்பாம்.

### பொழிப்புரை :

தன் இச்சைக்குரிய பக்குவான்மாவாகிய வள்ளிநாயகியார் ( மனநம்பி புலவேடர் துணையாகப் பிரபஞ்சமாகிய தினைப்புலத்தைக் காத்துவந்த தன்செயலிழந்து, ஞானபூமியாகிய ) சிற்றூருக்குச் செல்வதற்கு ஏதுவாக வினைப்போகமாகிய தினைப்புனமும் முற்றி முழுவதும் அறுவடையாக அதன்பின்னரும், மலபரிபாகமடைந்து அருட்சத்தி பதியப்பெற்று உலகத்து உயிர்கள் உய்வடையுமாறு (ஆட்கொண்டருளும் திருவிளையாடலாக) அத்தினைப்புனஞ் சென்று, தலைவியை அங்கே காணுதவராய் அவர் எங்கே சென்ருர்? என்று ( பெரிய தினைப்புனத்தையும், அங்குள்ள சோலை, மேகம்.

மலைகளையும், பொறியாகிய பறவை கரணமாகிய விலங்குகளையும்) கேட்டு வருந்திச் சோர்வடைந்து ஒருவாறு மனத்தென்பு உண்டாக வந்து, கிராஞ்சியந் திருப்பதியில் அமர்ந்தருளியுள்ள கந்தசுவாமியாரின் அருள்மயமாய் எங்கும் வியாபித்துள்ள திருவடிகளை நாள்தோறும் நீரும் பூவும் பிறவுங் கொண்டு பூசித்துக் கைகுவித்து வணங்குவாம் எ – று. பெருங்காடு, தென்பாகக் கிராஞ்சி என்பன பிரகேழிகை அணியின்பாற்படும்.

### அவனருளால் முத்தியடைதல்

**15. பாசத்திணை காத்துவள்ளி பரணின்மீ தமர்ந்திருந்து**
**தேசிகநல் வேடரால் திணைமுற்றிக் குறிச்சிபுகப்**
**பேசுமின்பங் கிராஞ்சியருட் பேறின்றி இல்லையென்ன**
**ஆசையொடும் வந்தலைந்த அறுமுகன்தாள்**
**அஞ்சலிப்பாம்.**

பொழிப்புரை :

கன்ம மலமாகிய திணையைக் காவல் செய்து தத்துவாதீதமாகிய பரணின்மீது விரும்பித் தவமிருந்து பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார், வேட்டுவக் கோலத்தில் அங்கு வந்து உபதேசித்தருளிய நல்ல சற்குருநாதனின் அருளால், விணையாகிய திணை முற்றி (அறுவடை செய்ய) ஞான பூமியான சிற்றூர்க்குப் போக, மிக மேலானது எனப் பேசப்படும் பேரின்பம் கிராஞ்சியம்பதிக் கந்தசுவாமியாரின் திருவருளைப் பெற்று அவனருளால் அடையலாமல்லாமல் வேறெவ்விதமாகவும் அடைய முடியாது என்பதை உலகத்தாருக்கு உணர்த்துவதற்காக ஆசைகொண்டு (அறுவடையான) திணைப்புனத்துக்கு வந்து அவர் எங்கே சென்றார்? என்று பலவற்றையும் கேட்டு அலைந்த ஆறுமுகசுவாமியாரது திருவருளாகிய திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ-று.

### வேலன் வெறியாடல்

**16. பிள்ளையவள் அவசமுறப் பெற்றோர்வெறி யாட்டுவித்து**
**'உள்ளமகிழ் சிறப்புநேரின் உய்திவரும்' எனக்கேட்டுக்**
**கொள்ளையின்பஞ் செவிலித்தாய் கொண்டுபுரி**
**பூசையுடன்**
**வள்ளிமணஞ் செய்கிராஞ்சி வள்ளலடி அஞ்சலிப்பாம்.**

பொழிப்புரை :

மனமாகிய நம்பியரசன் வளர்த்தெடுத்த பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார் (முருகனைப்பிரிந்து ஆற்றாமைமிகுந்து) பரவச

முற்று வீழப்பார்த்த திரோதையாகிய செவிலியும் மனமாகிய கொடிச்சியும், புலவேடரும் வேலனை அழைத்து மடைபோட்டு எழுப்பிய சன்னதத்தில் ஆவேசித்து, ''யாம் உள்ளம் மகிழுஞ் சிறப்புச் செய்தால் இக்குறைபாடு நீங்கி உய்வுண்டாகும்'' என்று சொல்லச் செவிலி, அதைக்கேட்டு உவகையுற்று நேர்ந்து சங்கற் பஞ்செய்து செய்யும் விசேட பூசையோடு; வள்ளிநாயகி, அதைக் கேட்டுச் செய்யும் திருமணமாகிய சிறப்புங்கொண்டு, அவரவர் வேண்டியதை அருளும் அருள் வள்ளலாகிய கிராஞ்சியம்பதிக் கந்த சுவாமியாரின் திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ-று.

'உள்ளமகிழ் சிறப்பு' என்பதற்குச் செவிலி, விசேடபூசை என்ற வெளிப்படைப் பொருள்கொண்டாள், வள்ளி நாயகியார், திரு மணச்சிறப்பு என்ற குறிப்புப் பொருள் கொண்டார் என்க.

## இரவுக்குறி ஏகல்

17. நம்பிகுடிற் புறஎல்லை நள்ளிருளிற் சென்றருளச்
செம்மனத்தின் இருளைகண்டு தீயநெறி வரவகற்றி
அம்மைவள்ளி உடன்போக்க அபேதமாய்க் கிராஞ்சியமர்
மும்மைதரு முருகனடி முப்பொழுதும் அஞ்சலிப்பாம்.

### பொழிப்புரை :

அர்த்த ராத்திரியில் மனமாகிய நம்பியரசன் வாழும் சிற்றூரிலுள்ள சிறுகுடிலின் எல்லைப்புற (மான ஆஞ்ஞைத்தான) த்தில் வெளிப்பட்டு (நின்றார்,) நிற்கத், திருவருளாகிய தூய தோழி வந்து (தரிசித்தாள்;) தரிசித்துத் துரியநிலை கடந்து மேலேறு வார்க்கு ஆணவ இருளும், கோபயாளி காமக்களிறு லோபவிலங்கு ஆதியனவும் வழியிடையே) இடையூறு விளைக்கும்; (ஆதலால் இவ் வாறு இரவில் வரலாகாது என) நெறி விலக்கிப், பக்குவான்மா வாகிய வள்ளியம்மையாரை (த் தாயும் நாயும் நகருமாகிய பிர பஞ்சம் ஒடுங்கிய நேரத்தின் சுற்றமாகிய பந்தங்களிலிருந்து நீக்கி அழைத்துவந்து, அபேதத்தியானமாகிய உச்சநிலைசாரும்பொருட்டு) உடன்போக ஒம்படுத்தி (அனுப்பினள்;) அனுப்ப, (இச்சாசத்தி யும் தானும்) பேதமின்றி ஏகபோகமாகிக் கிராஞ்சியம்பதியில் விரும்பி வீற்றிருந்து இவ்வுலக பாக்கியமும், சுவர்க்க போகமும், வீட்டின்பமும் தந்தருளும் கந்தசுவாமியாரின் திருவருளாகிய திரு வடியைக் காலை, உச்சி, மாலையாகிய முப்போதும் கைகுவித்து வணங்குவாம் எ - று.

## உடன்போக்கு

18. பதிகடந்தே உடன்போந்து பரவெளியில் சோலைபுக
மதிபுலவே டருக்கஞ்ச, 'வந்துநம்பின் இருந்தருள்க
எதிருறவேல் இருந்த' வென்றே இருமையினில் ஒருமை
செய்து
கதியருளுங் கிராஞ்சியான் கழலிணைகள் அஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

ஞானபூமியாகிய சிற்றூரை நீங்கி அபேதத் தியானமாகிய உடன்போக்கினைச் செய்து பரமசற்குருவாகிய தாமும் பக்குவான்மாவாகிய வள்ளிநாயகியாரும் ஞானாகாயத்திலே தெய்வ மணங் கமழும் பேரின்பப் பூஞ்சோலையினுள்ளே செல்ல, அம்மையாரின் உள்ளமாகிய ஆத்மபோதம் ஐம்புல வேட்டுவர் தேடிவருதலைக் கண்டு அச்சமுற, என்னை நம்பின் இருக்க - வந்து என்பின் இருப்பாயாக; அவர்களை எதிர்க்க மெய்ஞ்ஞான சக்தியாகிய வேல் இருந்தது என்று திருவாய்மலர்ந்து, தன்னோடு தன்மையால் இரண்டற்று ஒன்றுமாறு செய்து, வீடுபேற்றையருளுங் கிராஞ்சியம்பதிக் கந்தசுவாமியாரின் பாசத்தை வெற்றிகொண்டு வீரக்கழல் அணிந்துள்ள திருவருள் மயமாகிய திருவடிகளைக் கைதவித்து வணங்குவாம் எ - று.

## ஐம்புல வேடருக்கு அருள்புரிதல்

19. திருத்தணிகை மலையிழிந்து தினைப்புனத்திற் புலவேடர்
அருட்கரண முறத்தீட்சை அளித்துவள்ளி உடன்
போக்கில்
உருத்துவரச் சிவகரண ஒளியருளி மணமயர்ந்து
செருத்தணியக் கிராஞ்சியமர் சிவகுருதாள் அஞ்சலிப்
பாம்.

பொழிப்புரை :

சுத்த துரியத் தியானத் தானமாகிய திருத்தணிகை மலையிலிருந்து நீங்கிப் பிரபஞ்சமாகிய தினைப்புனத்திற்கு மார்ச்சால சம்பந்தமாகப் பரமசற்குருவாய்வந்து (பக்குவான்மாவாகிய வள்ளியம்மையார்க்கு ஞானோபதேசஞ் செய்த சமயத்து) ஐம்புல வேடரும் மனநம்பியரசனும் வர அவர்களுக்குத் திருநீறளித்துத் தீட்சை கொடுத்து அவர்களுடைய கருவி கரணங்கள் பாசத்தன்மை நீங்கி அருட்தன்மை பெறச்செய்து, அம்மையாரின் அபேதத்

தியானமாகிய உடன்போக்கின்போது வாசனுமலம் பற்றி அவர்கள் சீற்றத்தோடு எதிர்த்துவரச் சிவகரணமாக ஒளிபெற அருள் புரிந்து, இடையறுத் தியானமாகிய திருமணத்தால் இச்சைமயமான பக்குவான்மாவோடு இரண்டறக்கலந்து, சூரபதுமனுதி அசுரரோடும், ஐம்புல வேடரோடும் அவர்களுடைய அஞ்ஞானத்தை அழிக்கச்செய்த யுத்த வேகந் தணியும் பொருட்டுக் கிராஞ்சியம்பதியில் விரும்பி வீற்றிருக்கும் கந்தசுவாமியாரின் திருவருள் மயமான திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

### வேட்டுவருக்கு விசுவரூபங் காட்டுதல்

20. பரவெளியின் சேவலெனப் படுந்நாதத் திறந்துசிவ
கரணமுடன் எழும்வேடர் கண்டுமனம் களிகூரக்
கருணையொடும் ஆதாரக் கடவுளென ஆறுமுகப்
பெருவடிவ மாங்கிராஞ்சிப் பிரானடிகள் அஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

ஞானுகாயத்தில் பரநாதமாகிய சேவல்கூவிய தொனியால் இறந்து (ஆன்மபோதமாகிய நாரதர் வேண்டுகோளுக்கிணங்கித் தமது கிரியாசக்தியாகிய வள்ளியம்மையினுல்) சிவகரணத்துடன் எழுப்பப்பெற்ற மனமாதி புலவேடர்கள் தரிசித்து மிக்க மகிழ்ச்சியடையுமாறு அவர்கள்மீது கொண்ட கருணையினுல் ஆறு ஆதாரத் தெய்வங்களாவாருந் தாம் ஒருவரே என்பதைக் காட்டும் ஆறு முகங்களோடு கூடிய திருப்பெருவடிவங் கொள்ளும் கிராஞ்சியம்பதிக் கந்தசுவாமியாரின் திருவருளாகிய திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

### சிற்றூர் மீண்ட திருவிளையாடல்

21. தளையழித்து வள்ளியினைச் சற்குருவாய் உடன்கூட்டி
விளைவுணர்த்தி வனவேடர் விரைந்துதம்மூர் அழைக்க வந்து
கிளைபிறவி அறஎதிர்ந்த கிளியீடென் றகமகிழ
விளையாடிக் கிராஞ்சியமர் விசாகன்தாள் அஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

பரமசற்குருவாகிப் பக்குவான்மாவாகிய வள்ளிநாயகியாரின் பாசமாகிய கட்டினை நீக்கி (அத்துவித மெனப்படும் அன்பினைந்

திணைக் களவியல் மணமாக அபேதத் தியானமாகிய) உடன்போக்கிற் கூட்டிச் சென்றருளியும், சிவகரணம் பெற்று மனமாதி புலவேடர்க்கு நிகழ்ந்த செய்தியினை அறிய அறிவித்தும், அவர்கள் தங்களின் சிற்றூர்ச் சிறுகுடிலுக்கு வருமாறு பிரார்த்திக்க வந்தருளியும், வேட்டுவச் சுற்றம் தம் பிறவிப் பெருங்காடு நீங்கத் தமக்குக் கிடைத்த கிளியீடாகிய அருட்செல்வமென்று களிகூரவும், பலவேறு ஞானத்திருவிளையாடல்களைச் செய்தருளிக் கிராஞ்சியம் பதியில் அமர்ந்தருளும் கந்தசுவாமியாரின் திருவருள்மயமான திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

கிளியீடு - பெருங்காட்டிலேயுள்ள உயர் மரத்தின் கீழே கிளிகளால் இடப்பட்டு மலைபோலக் காணப்படும் தானிய கதிர்க் குவியல்.

## திருக்கலியாணம்

22. நம்பிமன்னன் தாரைவார்க்க நாரதர்அக் கினிவளர்க்க
அம்பிகைசிவனருள அயன்திருமால் அடிபரவக்
கொம்பர்மலர் அறுகரிசி குறமகளிர் இடக்கிராஞ்சி
யம்பதியான் திருமணத்தை அடைந்திடநாம் அஞ்சலிப்
பாம்.

பொழிப்புரை :

( பக்குவான்மாவாகிய வள்ளிநாயகியாரை வளர்த்தெடுத்த ) மனமாகிய நம்பியரசன் ( தந்தவரே வாங்கிக் கொள்ளுமாறு ) தீர்த்த நீரை வார்த்துத் தத்தஞ் செய்து கொடுக்க, (பார்ப்பனப் பாங்கராகிய) நாரத மகாமுனிவர் ஆசாரியராய்த் தீவளர்த்துத் திருமண வேள்வியைச் செய்ய, உமையம்மையாரும் சிவபெருமானும் ஆகாயத்தே நின்று ஆசிகூறியருள, அவர்களோடு நின்ற அயனும் திருமாலும் புஷ்பாஞ்சலி செய்துவணங்க, விருத்தரான வேட்டுவமாதர் பூவோடு கலந்து அறுகரிசியிட, பரமசற்குருவாகிச் சுத்த கேவலத்துத் தோயாதே தோய்ந்து பேரின்பமுறத் திருமணஞ் செய்தருளிய கந்தசுவாமியாரை நாமும் பசு கரணங்கள் புற விடயங்களிற் சென்று பற்றுது வரைந்து நின்று, கைகுவித்து வணங்குவோம் எ - று.

## திருவமுது செய்தல்

23. பெருமணத்தில் அறுமுகத்தன் பிட்டுவைத்த
நிவேதனங்கள்
திருவமுது செயவெங்குஞ் செறிந்தெல்லா
வற்றிலுமாய்
ஒருமையொடு நிறைந்திடுமா(று) ஒளிர்பரத்து வப்
பொருளாய்ப்
பெருவனத்துக் கிராஞ்சியமர் பிரானடிகள் அஞ்சலிப
பாம்.

பொழிப்புரை :

*(இருமையில் ஒருமையுறும்) பேரின்பமயமாகிய திருமணத்தில் ஆறுமுகப்பெருமானின் ஆறுதிருவதனங்களுக்கும் தனித்தனியே மிகுந்த அன்புடனே படைக்கப்பெற்ற (தேன், தினைமா, காய், கனி, கிழங்கு பிறவுமான) ஆறுவித நிவேதனப் பொருள்களை இச்சாசத்தியுந் தானும் திருவமுது செய்த (ருளும் பாங்கில் திருக்கரங்களாலே பரிசித்த) மாத்திரத்தே திருவமுது செய்ததாலாகும் பயன் எல்லா உலகங்களிலும் நிறைந்து தேவர் முனிவர் கணங்கள் சராசரங்கள் அனைத்துயிர்கள் மாட்டும் ஒருங்கே சென்று பொருந்) திடுமாறு விளங்குகின்ற பரத்துவமுடைய பதிப்பொருளாய்ப் பெருங்காடு என்னுங் குறிச்சியின் கண்ணே கிராஞ்சியம் பதியில் அமர்ந்தருளியுள்ள கந்தசுவாமியாரின் திருவருள் மயமான திருவடிகளைக் கைகுவித்து வணங்குவாம் எ - று.*

*எல்லா உலகமுமான அந்தர்யாமியை நுகர்விக்க, அகில உலகமும் பூரித்தது.*

## தணிகைமலைச் சிறப்பு

24. மூலமல நகரமற்ற முத்திபஞ்சாக் கரமலராய்க்
காலையுச்சி மாலையென்றுங் காலமுறை தவறுது
நீலமலர் திருத்தணிகை நிகரென்னக் கிராஞ்சியமர்
பாலசுப்பிர மணியர்திருப் பாதமலர் அஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

*மல எழுத்தாகிய மகரமும் திரோதை எழுத்தான நகரமும் நீங்கிய முத்தி பஞ்சாக்கர மலராகக் காலைவேளை, நண்பகல்,*

மாலேவேளே என்ற பூசைக்கால முறை என்றும் இடையறுதலின்றி நாள்தோறும் மூன்று நீலோற்பல மலர்கள் மலருஞ் சிறப்பினே யுடைய திருத்தணிகை மலேக்குச் சரிநிகர் சமானமானது கிராஞ்சி யம்பதியே எனத் திருவுளங்கொண்டு விரும்பி விற்றிருந்தருளும் கந்தசுவாமியாரின் அழகியதாய் எங்கும் வியாபித்துள்ள திருவரு ளாகிய திருவடிகளேக் கைகுவித்து வணங்குவாம் எ - று.

### கந்தகிரிக்குச் செல்லுதல்

25. கானவள்ளி தனேமணந்து கந்தகிரி சென்றுமுல்லே
வானவர்தம் மகள்பாங்கி வந்தனளென் றுளமகிழ
நானிலத்தில் லறம்வளர்க்கு நல்லருளால் கிராஞ்சி
வந்து
தீனபந்து வாயமர்ந்த சேந்தனடி அஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

பக்குவான்மாவாகிய வள்ளி நாயகியாரை இரண்டறக் கலந்து ஆட்கொண்டருளிக் கந்தகிரிக்குக் கூட்டிச்செல்லப், பரிபூரண மறு வில் கற்பின் வாணுதலாகிய தெய்வ நாயகியார் (இன்பமாக்கட லாகிய இவ்விடத்துத் தனித்து ஒருத்தியாய் இருந்த எனக்கு) உரிமையுடையாள் ஒருத்தி வந்து சேர்ந்தது நற்பேறேயென்று உவகைமிக, உலகில் இல்லறத்தை வளரச்செய்து பாவத்தைத் தேய்க்க வேண்டுமென்று திருவுளம்பற்றிய நல்ல கிருபையால் கிராஞ்சியம்பதியில் எழுந்தருளி ஏழை பங்காளனுய் விரும்பி வீற் றிருக்கும் கந்தசுவாமியாரின் திருவருளாகிய திருவடிகளேக் கை குவித்து வணங்குவாம் எ - று.
பாங்கி என்றது உரிமையுடையவர் என்னும் பொருட்டு.

### தெய்வநாயகியாருக்குச் செய்தி சொல்லுதல்

26. மஞ்சுவளர் தினேப்புனத்து வள்ளியை மணம்புணர
விஞ்சுகுரு வாகியங்கு விளேத்தசெயல் அத்தனேயுங்
குஞ்சரிக்குக் கூறியருட் குருவாகிக் கிராஞ்சிவந்த
கஞ்சமலர்த் திருவடியில் கலந்துநின் றஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

(தெய்வநாயகியைக் கந்தகிரியில் விட்டு அன்பினேந்திணைக் களவியலே மேற்கொண்டு) மேகங்கள் சஞ்சரிக்கும் உயர்ந்த வள்ளி

மலைச் சாரலிலுள்ள தினைப்புனத்தில் (சிற்றேனல் காத்துநின்ற) பக்குவான்மாவாகிய வள்ளிநாயகியாரிடத்தே மார்ச்சால சம்பந்த மாகச் சற்குருவாகச் சென்று பலவித மாயைச் செயல்கள் செய்து, இருமையில் ஒருமையாகிய திருமணஞ்செய்து திருத்தணிகை சென்று, சிலநாள் அங்கே தங்கியிருந்து கந்தகிரிக்குவந்த வரலாறு முழுவதையும் மறுவில் கற்பின் வாணுதலாகிய தெய்வநாயகி அம்மையாருக்குக் கூறி, உள்நின்று உணர்த்தும் அருட்குருவாகிக் கிராஞ்சியம்பதியிலமர்ந்த கந்தசுவாமியாரின் அன்றலர்ந்த செந் தாமரை மலரனைய திருவருளாகிய திருவடிகளில் உள்ளங்கலந்து நின்று கைகுவித்து வணங்குவாம் எ - று.

### ஞானப்பழம்

27\. சந்தமாருந் தருவாகித் தவமாதர்க் கொடிபடர
அந்தகாரத் துயராற அனைத்துயிர்க்கும் அருள்பூத்து
பந்தமாயக் காய்த்துஞானப் பழமாரக் கிராஞ்சியமர்
கந்தசாமி திருவடிகள் கலந்திடநின் றஞ்சலிப்பாம்.

பொழிப்புரை :

அழகு நிறைந்த தெய்வ தருவாகி, தவம்புரிந்த கிரியா சத்தி யாகிய வள்ளிநாயகியும் ஞானசக்தியாகிய தெய்வநாயகியும் அழகிய கொடியாய் மரமாகிய தம்மீது பற்றிச் சுற்றிப் படரா நிற்பக், கேவலநிலையில் ஆணவ இருளிற்கிடந்து தடுமாறி வருந் தும் துயரந் தணியுமாறு எல்லா உயிர்களுக்கும் (தனு கரணுதி களைக் கொடுத்தற்கு) மன இச்சையாகிய பூவைப்பூத்து, சகல நிலையிலே பிறவிக்கு ஏதுவான பாசபந்தங்களாகிய காயைக் காய்த்து, (சுத்த நிலையில் பாசநீக்கம் சிவப்பேறு அடைந்த) அயரா அன்பினர் அனுபவ ஞானப்பழம் பெறுமாறு கிராஞ்சியம் பதியில் விரும்பி வீற்றிருக்கும் கந்தசுவாமியாரின் திருவருளாகிய திருவடிகளிலே மனம் வாக்குக் காயங்களாற் கலந்து நின்று கைகுவித்து வணங்குவாம் எ - று.

## செந்தமிழ்மாலை

மூலமும் மெய்ப்பொருள் உரையும் முற்றுப் பெற்றன.

திருச்சிற்றம்பலம்.